*News and Articles in Tamil and English Please send them to:*

THE EDITOR,

The Morning Star,
Diocesan Office,
Vaddukoddai

# THE MORNING STAR

Registered as a Nespaper at the General Post Office, Sri Lanka

Under No.Q / J / 104 / News /

*Established : 1841 : A Christian Weekly : Published Every Friday*

**Vol: 156 Jaffna, Friday, 30 June 1995 No. 26**

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

Subscription
Island Rs.100/-
For Advertisements
Apply to:
THE MANAGER
The Morning Star,
Diocesan Office,
Vaddukoddai

## Chundikuli Girls' College Centenary 1896 - 1996 SOME HISTORICAL NOTES

### 1. The Humble Beginnings

Chundikuli Girls' College came into existence a little less than a century ago almost seventy five years after the establishment of all the other mission schools in Jaffna. Therefore Chundikuli did not have all those teething problems the other pioneering missionary institutions had. It could learn from the experience of its several predecessors in the mission field and was also able to recruit experienced and knowledgeable missionaries and nationals into the teaching profession with immediate effect. It could also enrol students from families with one or two generations of devout Christian nurture. Therefore Chundikuli sprung to action almost spontaneously in every conceivable direction - higher studies, religious activities, sports, home craft, western music, dramatics both English and Tamil moving forward in double quick time to achieve pre-eminence as a "veritable queen" among the girls schools in Jaffna and second to none in the South too.

Mr. Alfred Hensman wanted an inexpensive, convenient and accessible girls school for an English education for his daughters in Jaffna Town and succeeded in persuading the Rev. James Carter, the Principal of St. John's College and Mrs. Carter to initiate a small school in the Principal's Bungalow and so it began in 1896 with nine girls from the Hensman and Niles families. Grace Gnanamma Hensman, one of the daughters of Mr. Hensman of the original group of students became one of the most love able and finest teachers and vice-principals the school ever had. She was wedded to the school as student, teacher and vice-principal for its first forty years. This was an unusual achievement for a national as the other pioneering institutions had their first nationals on the staff after one or two generations of existence.

Among the numerous tributes made to Miss Hensman it was repeatedly said of her that without very high academic qualifications she proved to be a versatile teacher handling mathematics, English, Music, handicrafts, gardening, and sports including tennis. Above all it was said of her that she was a deeply religious woman with a sweetness of disposition, tender affection, and a very cheerful and serene nature that gave her a beauty of character so attractive and impressive. Generations of Chundikuli girls bore and bear these admirable and pleasant personality traits and the present school hall is named after Grace Gnanamma Hensman.

**A. Kadirgamar – Prize Day Address**

---

## Moderator and Synod General Secretary visit Colombo Church

The Moderator of the Church of South India, the Rt. Rev. Dr. Vasanth P. Dandin & Professor George Koshy, the General Secretary who were present in Colombo to participate at the CCA General Assembly visited our Colombo Church on Sunday the 11th June. Rt. Rev. Dr. Vasanth P. Dandin celebrated Holy Communion and preached the sermon.

A reception followed the service presided over by our Bishop. The Moderator, General Secretary of Synod, and Rev. Dr. Dyan Chand Carr spoke at this meeting They said that they enjoyed the fellowship of the Jaffna Diocese from the time of the CSI in 1947 inauguration of the CSI in 1947

Mrs. Vasanthy Rajaratnam proposed the vote of thanks.

---

## Clergy Tranfer

Rev. T. Thevaharan has been transferred to Oddisuddan as from the 1st of July 1995. Rev. T. Thevaharan who was assigned work in Batticaloa by the general transfer slate in 1994 could not work there because of ill - health.

---

## Rev. Dr Eric Gass visits Sri Lanka

The Rev. Dr. Eric Gass, Secretary of the Board of Trustees of Jaffna College visited Sri Lanka during the second week of June 1995. He attended the General Assembly of the Christian Conference of Asia and planned to visit Jaffna College immediately after the CCA General Assembly. It was unfortunate that he could not get Defence Ministry clearance to come to the Northern Province. He visited our centres in Vavuniya, Batticaloa, Colombo & Wattala and returned to United States on the 19th of June.

---

## OBITUARY

We are sorry to record the passing away of Mr. Swaminathan Balachandran, Director, Jaffna College Undergraduate Dept., Hospital road, Jaffna. Mr. Balachandran died of shock due to heavy shelling in Jaffna town on Wednesday the 28th June. He was 60 years old at the time of his death. He joined the staff of Jaffna College in 1963 and retired in August 1993. He was a Grade I special Post holder at the time of his retirement.

The funeral took place at his residence at Palam road, Thirunelvely, Jaffna. The service was conducted by Rev D. S. Thiyagarajah assisted by Revds. E. P. Solomons and Terance Sylvester (Methodist Minister). The tribute was paid by the Bishop and the Rev. A.A Paul preached the sermon.

The reamins were then removed to Koddady cemetery for interment. The Bishop performed the committal rites assisted by Revds. D. S. Thiagarajah and Earl P. Solomons.

Mr. S. Balachandran leaves behind besides his wife Grace Nee Edward, two sisters, mother and a large number of friends to bemoan his sudden demise.

## Evangeline Bicknell To Be 80

In August (1995) Evangeline Bicknell, wife of Dr. John Bicknell, will celebrate her 80th birthday. Contrary to a rumour circulated in a CSI constituency, Mrs. Bicknell is well, although she did have a pacemaker installed in her heart in December 1994. John is an active member of the Jaffna College Trustees, and both John and Evangeline are involved in demanding choral singing.

Emma Bicknell, wife of their son Tony, did, however, die of liver cancer last December. Their second son Christopher is to have the left kidney removed, in which a tumor was discovered. John will have a book out in October - his edition of the Letters of Leslie Stephens. Congratulations on the successful completion of this painstaking work!

**- R. Porter**

---

## Christian Medical College, (Vellore) Council Meeting

The Christian Medical College Council had their meeting on Thursday the 22nd June. The Rev. A. Jeyakumaran represented our Medical Board at this meeting.

---

## Rev. T. Thevanesan

The Rev. Thevathasan Thevanesan who served at Mankulam left for Tamilnadu Theological Seminary, Madurai to follow a course in Communication. It is hoped that Rev. Thevanesan will teach Communication at our Seminary after completing this course.

---

## World Assembly - Set

The World Council of Churches next world assembly will be held August 24 to September 7, 1998, in Harare, Zimbabwe. The Theme "Turn to God; Rejoice in Hope."

# SINHALESE ARE A NATION BUT NOT THE TAMILS!

## On Baiting the Tamil Nation

### Are the Tamils of Sri Lanka ONE among the minorities?

A grave mistake is made, very often culpably by the majority Sinhalese leaders of Sri Lanka, and innocently by foreigners and others, in referring to the Tamils of Sri Lanka as **ONE of the many minorities of Sri Lanka**. Some of the Tamils too, mostly living for a long time amidst the Sinhalese, have come to accept themselves essentially as **a minority living on the good will of the majority of this country**. But this mistaken notion among the majority Sinhalese or the inferiority complex of some Sri Lankan Tamils living in the south cannot falsify the historical truth about the millions of Sri Lankan Tamils living for centuries in the North and East of this country. A Speedy correction of this error is basic to solving the problems of the Sinhala – Tamil unity in this country.

### Are Sinhalese the only Sri Lankan Nation, and all others minorities?

The majority, especially their politicians and religious leaders tend to put all the non-Sinhalese of the island into 'one bag or under one label' and talk of them merely as ethnic-minorities. It was a logical maturation of this tendency in the chauvinistic minds of some Sinhalese that was clearly articulated by the last President Dingiri Banda. Hoping to rouse up the Sinhala masses with his racist call, he proclaimed that **the Sinhalese are the genuine People of the Land and the others are mere creepers living on concessions given by the Sinhala Nation.** But that parallel shamefully betrayed too much of the tendencies prevalent among the chauvinistic politicians of the majority community. Fortunately the majority rejected these tendencies and brought Chandrika to power.

But what makes the majority to think that the Sri Lankan Tamils are not a nation like them, but only an ethnic minority among the minorities, or worse still, merely a bigger creeper in comparison with the other creepers? Is the **numerical strength of the population the only criterion for nationality?**

### Have the Sinhalese more right to nationality than the Tamils?

Have these Tamils not lived for many centuries, just like the Sinhalese, as a distinct people with a distinct language' history, kings and kingdoms, culture and religion of their own? Have not these Tamils and their leaders contributed their share in building up the country and in fighting for independence of Sri Lanka from the colonials? **How will the Sinhalese of today react if the Tamils were to question their historical and cultural identity as a Sinhala Nation** or question the contribution of the Sinhalese in building up the country or fighting for independence from the colonials?

Has the colonial conquest for four centuries erased off or cancelled the right of the Sri Lanka Tamil to be a nation and at the same time conferred nationhood only on the Sinhalese? What is just and right for the Sinhalese Nationality should be equally valid for the Tamil Nationality too.

Then why this hesitation to recognize the Tamils as a distinctive Nation in Sri Lanka? Why this apparently broad-minded exhortation of the Sinhalese leaders to all minorities to come under the common cloak of a Sri Lankan Nation and a unitary nationstate while at the same time retaining privileges of nationhood only to the Sinhala Nation?

### Why Sinhala Nationalism in the vanguard of British Colonialism?

The fact is that once upon a time we **all - the Sinhalese, the Tamils, the Muslims and the Burghers were hurled into that one bag of indigenous people with vernacular languages. The British administered all of us as their dependents by unitary system of colonial government for their own benefit.** The different races of people were all equally subjects of the same King or Queen of England. And we all served the common crown with the least amount of jealousies among ourselves. **But with Independence from the colonial powers, the majority Sinhalese appear to have had a hidden plan to set themselves as the new master and determine the fate of the other so called minorities.**

Sinhalese were a distinctive race with their history of kings and kingdoms, with their cultural and religious heritage to become a true nation. **Why are they using the post-colonial cloak to set themselves as the one and only nation OVER all the others?**

The few decades of a unitary British administration served very well the interests of the English educated elite of Colombo and its suburbs, as well as those involved in business (mostly Christians and Muslims) living in and around Colombo. The then colonial government favoured the one nation-state idea (we are administered as one state and as such could consider ourselves, irrespective of our other native heritages and differences, as one nation!) Such a view was cemented and strengthened by the English language, a western outlook and the colonial education. They presumed that the one bag of many nationalities (Sinhala, Tamil, Muslim, Indian Tamil, Burgher, Malay) administered as one State is a single nation.

This presumption of one state administration as one nation got worsened when the extreme Nationalists among the Sinhalese took the liberties to call this one nation as the Sinhala Nation.

### Is Sri Lankan Nationalism a proud heritage of the Sinhalese but only a "safety label" for Tamils?

On the other hand there emerged among some of the Sri Lankan Tamils an **inflicted inferiority complex** and they covered themselves, mostly for security motives, business - profits and good acceptance by the majority, as Ceylonese or Sri Lankans. They hid or left behind their God - given native racial identity and passed off as 'broad - minded citizens' Ceylonese or Sri Lankans - and not as the 'narrow - minded' racists, who called themselves still Tamils. This is also noticable when the originally Sinhalese-speaking Tamils of Negombo turned themselves after the fifties into Tamil - speaking Sinhalese and of late pose as the defenders of Sinhala Nationalism in order to hide their true origins from India!

This could be seen also in the filling of passports or identity cards - the Sinhalese proudly write their race and national identity as Sinhalese while the minorities at times preferred to write their race and national identity as Ceylonese or Sri Lankas thus hiding their racial identity out of that complex. Further many of the tourist guides written by the Tourist Board of the government refer to the inhabitants of Sri Lanka as Sinhalese and the language of the country as Sinhalese!

### 6. Can the Sinhalese still continue to 'buy over' the minorities for consolidating their own nation

Sinhala politicians who came to power and wanted to find a 'settlement' and not a permanent solution to the ethnic problem, have approached the Tamil question merely as a minority-issue which can be 'settled by handling'. Against the murmurs of dissatisfaction of the minorities, they adopted the usual politician's technique of **keeping the minorities satisfied with 'favors or concessions' that do not cost the majority and of buying over their support in parliament-all done for the consolidation or betterment of the Sinhala Nation.** This was the case of all previous Sinhala governments - offering certain ministries and giving some concessions to few Colombo-based Tamil politicians to keep the minority - Tamils under control.

The Sinhalese majority of the South are so deep in their Sinhala-only -nationalism, that even now the well meaning among them who have not seen anything beyond Vavuniya speak and write only of minorities and satisfying the unending demands of the minorities for concessions. This outlook and language is totally unacceptable and hurting to the Tamils of North and East who are neither mere minorities nor beggars living on concessions.

That a great majority of the Tamil leaders of the past, as well as some opportunist-politicians even of the present, have fallen head over heals for such offers is very regrettable. Except for a very few, of the calibre of Mr. S. J. V. Chelvanayagam, many of the Tamil politicians of the past fell for such offers.

(To be continued in the next issue)

# வாழும் எழுத்துக்கள்



## தங்கைக்கு

### டாக்டர் மு. வரதராஜன் எழுதியது

அன்புள்ள தங்கை,

கணவன் மனைவி என்று இருவர் மட்டும் வெளியார் தொடர்பு ஒன்றும் இல்லாமலே வாழ்வதாக இருந்தால் ஒரு தொல்லையும் இருக்காது என்றும், வெளியுலகத்தில் எப்படியும் ஈடுபட்டுப் பழக வேண்டியிருப்பதால் தான் தொல்லைகள் விளைகின்றன என்றும் எழுதியிருக்கிறாய்.

இதுவரையில் உலக அமைப்பு அப்படி இருந்ததா? இனியேனும் இருக்க முடியுமா? முடியாது. முனிவர்கள் போல் மலையோரத்தில் ஆசிரமம் அமைத்துக்கொண்டு வாழ்வதானாலும் அங்கும் வெளியார் யாராவது நிழல் தேடித் தங்க வந்துவிடுவார்கள்; சிலர் மன அமைதி தேடிச் சீடராக வந்து விடுவார்கள், சிறை போன்ற வீடு ஒன்றை அமைத்துக் கொண்டு வாழ்வதானாலும் காவலாட்கள் சிலர் தேவையாக இருப்பார்: அவர்கள் வாயிலாக வெளியுலகத் தொடர்பு ஏற்பட்டுவிடும். அது வீண்கனவு

வெளியுலகத் தொடர்பு பலவாறு வைத்துக்கொண்டே நல்ல இல்வாழ்க்கை நடத்த முடியும் என்பது என் நம்பிக்கை. ஆனால் வெளியுலகம் எப்படி இருந்தாலும், குடும்பத்தில் இருவர் மனம் பொருந்தி வாழவேண்டும் இந்தப் பொருத்தம் இருந்தால் வெளியுலகத்தோடு தொடர்பு கொண்டு எப்படியும் வாழ முடியும்.

பலர் வாழ்க்கை வெளியாரின் தலையீட்டால் கெடுகின்றது என்பதை ஒப்புக்கொள்கிறேன். வெளியார்மேல் மட்டும் குறை சொன்னால் போதாது அந்தக் குடும்பத்தாரின் மேலும் குறை உள்ளது

என்ன குறை என்று கேட்கலாம். நெருக்கடி நேரும் போது எப்படி நடந்து கொள்வது என்று தெரியாத குறை: எது முதன்மையானதோ அதைப் போற்றி மற்றவற்றைக் கைவிடத் தெரியாத குறைதான்.

நெருக்கடிகள் வாழ்க்கையில் நேர்வது இயற்கை: அப்போது தான் அறிவும் திறனும் பயன்பட வேண்டும்

வீடு தீப்பற்றி எரியும்போது எதை முதலில் எடுத்துக் காக்க வேண்டும் என்ற அறிவு எல்லோருக்கும் இயற்கையாக உள்ளது. கந்தலையும் குப்பையையும் அடைப்பத்தையும் முறத்தையும் அப்போது யாரும் எடுத்துச் செல்வதில்லை. பெட்டியையும் பேழையையும் முதலில் எடுத்துக் காக்கிறார்கள். அதற்கு அடுத்தபடியும் வாய்ப்பு இருந்தால் துணிமணிகளையும் உணவுப் பொருள்களையும் எடுக்கிறார்கள். சிறந்தது இது, ஆகையால் இதை முன்னே எடுக்க வேண்டும் என்ற தெளிவு இயற்கையாக இருக்கிறது. சிறப்பு இல்லாதது இது: ஆகையால் எரிந்து போனால் போகட்டும் என்ற துணிவு மனப்பான்மையும் இருக்கிறது.

இது புறத்தே நேரும் நெருக்கடி, அகத்தே—உள்ளத்தில் நெருக்கடி நேரும்போது இவ்வாறு நடந்து கொள்ள வல்லவர்கள், எப்போதும் எந்தத் துறையிலும் வெற்றிபெற முடியும். எதை எதை விடாமல் போற்றுவது என்றும் எதை எதைக் கைவிடத் துணிவது என்றும் தெளிவாக உணர்ந்து நடக்க வேண்டும்.

தேர்வுக்குப் படிக்கும் மாணவன், தேர்வு நெருக்கத்தில் பாட நூல்கள் முதன்மையானவை என்று உணர்ந்து மற்றவற்றைக் கைவிடத் துணியாவிட்டால் பயன் என்ன? கலையில் ஈடுபட்ட இளைஞன் தன் கலைத்துறைக்கு உரியவற்றைப் போற்றுவதோடு, நெருக்கடியில் மற்றவற்றை மறக்காவிட்டால் பயன் என்ன? நாட்டுத் தொண்டில் ஈடுபட்ட ஒருவன் நெருக்கடி நேரும்போது தன் மனைவி மக்களையும் எதிர் காலத்தையும் பொருட்படுத்தாமல் தள்ளிவைக்கத் துணியாவிட்டால் பயன் என்ன?

'கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை' என்று நாட்டுப் புறத்துப் பழமொழி ஒன்று உள்ளது. இதை நினைத்தும் நெருக்கடி நேரத்தில் தயங்குவதால் பயன் இல்லை கூழ்தான் முக்கியம். மீசையைப் பிறகு ஒழுங்குபடுத்திக் கொள்ளலாம் என்று அப்போதைக்கு ஒன்றை ஒதுக்கத் துணிய வேண்டும். ஏழெட்டு நிலைகள் ஆசை மூட்டும் போதும் எது முதன்மையானது, எது இரண்டாவது, எது மூன்றாவது, எது நான்காவது, எது ஐந்தாவது எது ஆறாவது என இப்படியே பலவற்றையும் முறைப்படுத்தி வைத்துக்கொண்டு, உயர்ந்ததற்காக மற்றதைத் துறக்கத் துணியவேண்டும். மூன்றாவதன் பொருட்டுப் போராட்டம் வரும்போது, நான்காவது ஐந்தாவது முதலியவற்றைக் கைவிடுவது திறமையான போக்கு. ஆனால் மூன்றாவதற்கும் முதலாவதற்கும் போராட்டம் நேரும்போது மூன்றாவதைக் கைவிடுவதே கடமை.

கணவனோடு வாழும் ஒருத்திக்குக் கணவனுடைய அன்பே முதன்மையானது: மக்கள் இரண்டாம் நிலையினர், கணவன் பெற்றோரும் தன் பெற்றோரும் மூன்றாம் நிலையினர்: நண்பரும் உறவினரும் நான்காம் நிலையினர்: புகழும் மதிப்பும் ஐந்தாம் நிலையின: கலையும் பொழுது போக்கும் ஆறாம் நிலையின: தெருவாரும் ஊராரும் ஏழாம் நிலையினர். இப்படியே மற்றவரையும் மற்றவைகளையும் முறைப்படுத்தி வைத்துக் கொள்ளலாம். பெற்றோரைக் காப்பாற்றும் கடமை முன்னிற்கும்போது கலை பொழுது போக்கு முதலியவற்றைக் கைவிடத் துணிய வேண்டும்: புகழ் மதிப்பு முதலியவற்றைப் பொருட்படுத்திக் கணவனுடைய வெறுப்பைத் தேடிக்கொள்ளக் கூடாது. இப்படியே எந்த நெருக்கடியும் நேரும்பேது கண்ணை மூடித் துணியும் துணிவு வேண்டும். ஆனால் துணிவுக்கும் முன்னதாகவே நெஞ்சில் தெளிவு இருக்க வேண்டும். கணவனுக்கும் இது போலவே தெளிவும் துணிவும் வேண்டும். இல்லையானால் ஏதேனும் ஒரு நெருக்கடி நேர்ந்து வாழ்க்கையைப் பாழ்படுத்திவிடும்

## மூன்று நாள் ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கிறிஸ்தவ மாணவர் நிலையத்தின் மாணவர்களுக்கான மூன்று நாள் ஒன்று கூடல் (பாசறை) 1995. யூன் மாதம் 9 ம் திகதி மாலை முதல் 12 ம் திகதி மாலை வரை உசன தென்னிந்திய திருச்சபையின் வளாகத்தில் நடைபெற்றது. இப்பாசறையில் இருபத்தியாறு மாணவர்கள் சமூகம் அளித்திருந்தார்கள். இப்பாசறையின் மகுட வாக்கியமாக "இயேசுவின் சீடத்துவம்" என்பதைக் கொண்டிருந்தது.

இப்பாசறையில் முதல் நாள் 10ம் திகதி காலை வேதப் படிப்பை வண G.D ஆனந்தராஜன் 'இயேசுவின் சீடத்துவம்' என்பது என்ன என்பதில் வேத ஆராய்ச்சியை நடத்தினார். அதனைத் தொடர்ந்து கலந்துரையாடல் நடைபெற்றது. இதே பொருளில் வண V இராஜ்குமார் போதகர் உரையாற்றினார். மாலை நிகழ்வுகளில் விளையாட்டுக்களை வண G D ஆனந்தராஜன் அவர்கள் நடாத்தினார்.

மாலை 6.30 மணிக்கு 'நல்ல மரம்' என்கின்ற திரைப்படம் காண்பிக்கப்பட்டு அதனைக்குறித்து கலந்துரையாடல் நடைபெற்றது.

இரண்டாம் நாள் 11ம் திகதி 'சூழ்நிலை சார்ந்த சீடத்துவம்' என்ற பொருளில் வேதப் படிப்பையும் உரையாடலையும் வண்ணார்ப் பண்ணை சபை ஊழியன் வண S. S. பொன்ஸ அவர்களினால் நடாத்தப்பட்டது. அன்றைய மாலை விளையாட்டுக்களை அவரே முன்னின்று நடாத்தினார். இரவு மகுட வாக்கியத்தை மையமாகக் கொண்டதாக பாடல்களும், நாடகங்களும், பாசறை தீயில் நடைபெற்றது உசன் சபையின் ஊழியன் வண B ஜெயராஜ் திருமதி ஜெயராஜ் ஆகியோர் நடுவர்களாக இருந்தார்கள்.

மூன்றாம் நாள் 12ம் திகதி 'தற்கால சூழமைவில் சீடத்துவத்திற்கு இருக்கும் சவால்' என்ற பொருளில் வண. S. மில்ரன அவர்களினால் வேதப் படிப்பும், இதே பொருள் கொண்டதாக உரை நல்லூர்சபை ஊழியன் வண J. ஜெபமோகன் அவர்களினால் நடாத்தப்பட்டது.

இம் மூன்று நாள் பாசறையில் மாணவர்கள் அதிக பயன்களை பெற்றுள்ளார்கள் என்பதை 'பாசறையை பின்னோக்கி' என்ற நேரத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களினூடாக அறியக் கூடியதாயுள்ளது.

இந்தப் பாசறையில் வண. S. I. ஆனந்தராஜன் வண. S. அரானி ஆகியோர் அதிகமான உதவிகளைச் செய்தார்கள். அத்துடன் இரண்டு நாள் எம்முடன் தங்கி இருந்தார்கள்.

வண. S. மில்ரன்
Chaplin

(4-ம் பக்கம் பார்க்க)

# வண. டாக்டர் டானியல் பூவர் ஐயரின் கல்விப்பணி

1815 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் இருபத்திமூன்றாந் திகதி அமெரிக்காவின் நியூபெரிபோட் துறைமுகத்திலிருந்து ட்றிபர் (DR YAD) எனும் பாய்க்கப்பலில் பயணமாகி 1816 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இருபத்திரெண்டாந் திகதி இலங்கையில் கொழும்புக்கரையை வந்தடைந்த அமெரிக்கமிஷனரிச்சங்கத்தின் இரண்டாவது மிஷனரிமார் குழுவின் தொண்டரே வண. டாக்டர். டானியல் பூவர் ஐயராவார்.

கொழும்பு வந்தடைந்த பூவர் தம்பதிகள் 1816 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் பதினைந்தாந்திகதி இலங்கையின் வடபுலத்தின் வலிகாமப் பகுதியிலமைந்துள்ள தெல்லிப்பளையிற் குடிபுகுந்தனர். தெல்லிப்பளையே யாழ்ப்பாணத்தில் புரட்டாஸ்தாந்து மிஷனரியார் முன் முதலாகப் பணியாற்றிய இடம் என்பது குறிப்பிடத்தக்கது இத் தெல்லிப்பளையிலேயே பூவர் ஐயரின் கல்விப்பணியும் ஆரம்பமாகியது. தெல்லிப்பளைக் கிராமத்திலும். தெல்லிப்பளைக் கோவிற்பற்றைச் சேர்ந்த பல கிராமங்களிலும் கலாநிதி. பூவர் ஐயரினால் பல பள்ளிக்கூடங்களும் நிறுவப்பட்டன. தெல்லிப்பளைக் கிராமத்தில் இரண்டும் பள்ளிக்கூடங்களும், காங்கேசன்துரை, மயிலிட்டி வறுத்தலைவிளான், மலாகம் மாவிட்டபுரம் வடக்கு மாவிட்டபுரம்தெற்கு வசாவிளான், பன்னாலை ஆகிய இடங்களிலும் இப்பாடசாலைகள் அமைக்கப்பட்டிருந்தன இப்பாடசாலைகள், கிறிஸ்தவ சமயத்தை விளக்கும் நோக்கமாக ஆரம்பிக்கப்பட்டன. இங்கு கிறிஸ்தவ போதனையே முக்கியமானதாகவிருந்தது இப்பாடசாலைகளில் ஆரம்பத்தில் தமிழ் மக்களின் ஏட்டுச் சுவடிகளே கற்பிக்கப்பட்டன, ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி என்பன பயன்படுத்தப்பட்டன 1831 ஆம் ஆண்டிலே மிஷன் அச்சகம் நிறுவப்பட்ட பின்னர் கிறிஸ்தவ வினா - விடை, பாலபோதம், பைபிள்கதைகள் என்பவற்றை பூவர் ஐயர் தாம் எழுதியும். ஏனைய மிஷனரிமாரைக் கொண்டு எழுதுவித்தும் அச்சிட்டு இப்பள்ளிக்கூடங்களிற் கற்பித்தார்

1821 ஆம் ஆண்டில் பூவர்ஐயரினால் விடுதிப்பாடசாலைகளும் அமைக்கப்பட்டன. இவை தெல்லிப்பளை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், வட்டுக்கோட்டை, உடுவில் என்னுமிடங்களில் இயங்கின. பூவர் ஐயரின் கல்விப்பணியில் சிகரமாக அமைந்தது அவர் அமைத்த உயர் கல்வி நிறுவனமாகிய வட்டுக்கோட்டை செமினரி ஆகும் இச்செமினரி கூடாக ஓர் உயர்ந்த கல்வியறிவு மிக்க சமுதாயத்தை உருவாக்கிவிட வேண்டுமென பூவர் ஐயர் உறுதி கொண்டார். செமினரியின் முதன் முதலான அதிபராகவும். பேராசிரியராகவும் வீற்றிருந்து, விடுதிப்பாடசாலைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட நாற்பது ஆற்றலிலுள்ள மாணவர்களைச் சேர்த்துக்கொண்டு, அவர்களுக்குக் கணிதம் இயற்கைத் தத்துவம், கிறிஸ்தவம் ஆகியபாடங்களைத் தனியொருவனாகவே நின்று கற்பித்தார். இத்தகைய கல்வியறிவூட்டும் ஆர்வம், கம்பீரமாகச் சிலிந்து நின்று செமினரியை வளர்ப்படுத்தியது. இச் செமினரி முப்பத்திரண்டு வருட காலத்திற்குள் எழுநூறு கல்விமான்களை உருவாக்கியது. இக்கல்விமான்கள் கிறிஸ்தவ மதத்திற்கும், தமிழ்மொழிக்கும் அருஞ்சேவை ஆற்றினார்கள்.

பள்ளிக்கூடங்களை அமைப்பதில் நிகரற்றுவிளங்கிய பூவர்ஐயர் 1835 ஆம் ஆண்டு மதுரை மாநகர் சென்றடைந்தார். மதுரையில் ஆங்கிலப் பாடசாலைகளும், விடுதிப் பாடசாலைகளும் உருவாக்கப்பட்டன 1836 ஆம் ஆண்டு மதுரையிலும் அதனை சுற்றியுள்ள கிராமங்களிலும் முப்பத்தியேழு பாடசாலைகளே இருந்தன. ஆனால், 1837 பாடசாலைகளின் தொகை ஐம்பத்தொன்பதாக உயர்ந்தது. மதுரை மிஷன் ஆரம்பித்து மூன்று வருடங்களில் மதுரையிற் கற்ற பள்ளிச்சிறார்களில் அரைவாசிப்பேர் அமெரிக்கன் மிஷன் பள்ளிகளிலேயே கற்றுவந்தனர் என்பது குறிப்பிடத்தக்க தாகும்

---

டானியல் பூவரின் நினைவு நாளை ஒட்டி கட்டுரை வெளி இடப்படுகிறது

---

மதுரையில் ஆறு வருடங்கள் பணியாற்றிய பின் (1835- 1841) 1841 ஆம் ஆண்டு அக்ரோப்பர் மாதம் திரும்பவும் யாழ்ப்பாணந் திரும்பினார் வண. டாக்டர் டானியல் பூவர் ஐயரின் கல்விப் பணியில் பாடசாலைகளை அமைத்தல், பாடங்களைச் சொல்லிக் கொடுத்தல் மட்டுமின்றி, தமிழ்ப் பாடநூல்களையாத்தல், பழந்தமிழ் ஓலைச் சுவடிகளைக்காத்தல் தமிழ் உரைநடையை வளர்த்தல் என்பனவும். போற்றி பேணப்பட்டன இவற்றால் நம்தாய் மொழியாகிய மொழி உலகப் பெருமொழியாக வளர்ச்சியெய்தியது.

## D. S. சொலமன்

1816 ஆம் ஆண்டு ஆரம்பித்த வண. டாக்டர், டானியல் பூவர் ஐயரின் கல்விப்பணி 1855 ஆம் ஆண்டு நிறைவெய்தியது. 1855 ஆம் ஆண்டில் மானிப்பாயில் ஊழியத்தை மேற்கொண்டிருந்த வேளையில், யாழ்ப்பாணம் முழுவதையுமே கலக்கியடித்துக் கொண்டிருந்த 'கொலரா எனும் கொடிய நோய் பூவர் ஐயரையும் பிடித்துக் கொண்டது. 1855ஆம் ஆண்டு பெப்புரவரி மாதம் மூன்றாந்திகதி வண. டாக்டர் டானியல் பூவர் ஐயர் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அமெரிக்க மிஷனறிமாரின் கல்விப்பணியில் வண டாக்டர் டானியல் பூவர் ஐயரின் பணி மகத்தானதாகும். யாழ்ப்பாணத்தின் வலிகாமப் பகுதியில் ஆரம்பித்த பூவர் ஐயரின் பணி அறிவுப் பசி கொண்டு யாழ்ப்பாணச் சமூகத்திற்கு மெய்யறிவு எனும் ஞான ஒளியைத் தந்தது இத்தகைய மெய்யறிவாகிய ஞான ஒளியை 'இயேசு கிறீஸ்துவே வாழ்வின் ஒளி' எனக்கொண்டு பூவர் ஐயரால் ஆரம்பிக்கப்பட்ட வட்டுக்கோட்டைச் செமினறி என்று அழைக்கப்பட்ட இன்றைய யாழ்ப்பாணக்கல்லூரி தொடர்ந்தும் கொடுத்தவண்ணமாகத் திகழ்கின்றது இவ்யாழ்ப்பாணக்கல்லூரி பூவர் ஐயரின் பிறந்ததினமாகிய ஜூன் மாதம் 27ந்திகதியை கல்லூரிஸ்தாபகர்தினமாகவும், இனி வரும் காலங்களில் கல்லூரிப் பரிசளிப்புத்தினமாகவும் கொண்டாட இருக்கின்றமை சிறப்பானதாகும்.

---

## விண்ணகக் கடவுளின் வாழ்த்து

''கடவுளின் திருப்பெயர் என்றென்றும் வாழ்த்தப் படுவதாக!
ஏனெனில் ஞானமும்வல்லமையும் அவருக்கேஉரியன!
காலங்களையும் பருவங்களையும் மாற்றுபவர் அவரே!
அரசர்களை விலக்கி மாற்று அரசர்களை நிலை நிறுத்துபவர் அவரே!
ஞானிகளுக்கு ஞானம் வழங்குபவர் அவரே!
அறிவாளிகளுக்கு அறிவை அருள்பவர் அவரே!
ஆழ்ந்த மறை பொருள்தனை வெளிப்படுத்துபவர் அவரே!
இருளில் உள்ளதை அறிபவர் அவரே!
ஒளியும் வாழ்வது அவருடனே!
எங்கள் தந்தை இறைவா! உமக்கு
நன்றியும் புகழும் கூறுகின்றேன்; ஏனெனில்,
எனக்கு ஞானமும் ஆற்றலும் தந்தவர் நீரே!
நாங்கள் உம்மிடம் கேட்டதை
இப்பொழுது எனக்குத் தெரியப்படுத்தியவர் நீரே!
அரசனது காயத்தை எங்களுக்கு அறிவித்தவரும் நீரே!

(தானியேல் - 2 : 20 - 23)

---

## மூன்று நாள்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

### ஞான ஒடுக்கம்

யாழ்ப்பாண பல்கலைக்கழக கிறிஸ்தவ மாணவர் நிலையத்தின் மாணவர்களுக்கான ஒருநாள் ஆராதனை 28.05.1995 ம் திகதி காலை திருவிருந்து ஆராதனையுடன் கிறிஸ்தவ சேவாச்சிரமத்தில் நடைபெற்றது இந்த ஞான ஒடுக்கத்தையும் காலை ஆராதனையையும் இறையியல் கல்லூரி அதிபர் வண D.S.தியாகராஜா நடத்தினார். திருவிருந்திலே chaplain வண. S. மில்ரன் உதவிசெய்தார். இந்தஞான ஒடுக்கம் காலை 8 45 மணி முதல் மாலை 3.30 மணிவரை நடைபெற்றது. வேதப்படிப்பும். உரையும், கலந்துரையாடலும் வண. D. S. தியாகராஜா அவர்களினால் நடாத்தப்பட்டது மாணவர்களுக்கு இந்த ஞான ஒடுக்கம் அதிக பிரயோசனமாக இருந்தது.

---

## காகிதாதிகளுக்கு தட்டுப்பாடு ?

யாழ் குடாநாட்டில் பாடசாலை மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகள் மற்றும் காகிதாதிகளுக்கு தட்டுப்பாடுநிலை ஏற்பட்டுள்ளதாகவும் இதனைப் பெற்றுத்தர அரசாங்க அதிபர் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் பாடசாலை அதிபர்கள் மற்றும் கல்வித்திணைக்கள உயர் அதிகாரிகள் கூறியுள்ளதாகத் தெரியவருகிறது

---

## முத்திரைத் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம் பிரதம தபாலகத்தில் பெறுமதி வாய்ந்த முத்திரைகள் முடிந்துவிட்டன. இதனால் யாழ்.மாவட்டத்தின் ஏனைய தபாலகங்களிலும் முத்திரைகளுக்கு தட்டுப்பாடு நிலவிவருகின்றது. 01 ரூபாவுக்கு உட்பட்ட முத்திரைகளே உள்ளதாகக் கூறப்படுகிறது.

நீதி ஜனத்தை உயர்த்தும் பாவமோ
எந்த ஜனத்துக்கும் இகழ்ச்சி.

# உதயதாரகை

ஆதீன காரியாலயம், வட்டுக்கோட்டை
Estd. 1841
மலர்: 156 30-06-1995 இதழ்: 26

## அருட்தொண்டரின் அருட்பணிகள்

யாழ், குடாநாட்டில் 19 ம் நூற்றாண்டு தொட்டு இறைவன் காலத்திற்குக்காலம் திருப்பணியை நிறைவேற்ற அருட்தொண்டர்களை அனுப்பிக்கொண்டே வருகிறார். இவர்களிற் பலர் 1819ம் ஆண்டு தொடங்கி 1919 ம் ஆண்டு வரை இங்கு வந்து நற்பணியாற்றி வந்தனர்.

இலங்கை அமெரிக்க மிஷன் வரலாற்றில் 1816 ஆம் ஆண்டு நமது சபை மக்களால் என்றும் மறக்க முடியாத ஓராண்டாகும். யாழ், குடாநாட்டில் அருட்பணிக்கு அதிக வாய்ப்பிருப்பதாக-இங்கு முதலில் தன்மையாக வந்த அருட் பணியாளர் சாமுவேல் நியுவெல் அவர்கள் மூலம் அறிந்த அமெரிக்க மிஷன் சங்கம் - தனது இரண்டாவது மிஷன் அணியை இலங்கைக்கு அனுப்ப முடிவு செய்தது இதுவே இலங்கை அமெரிக் மிஷனின் தோற்றமாகும்.

அமெரிக்க இலங்கை மிஷனின் முதாவது மிஷன் குழு 1815 ம் ஆண்டில் அமெரிக்காவிலிருந்து முறைப்படி புறப் படடது. 9பேர் சேர்ந்த இக்குழுவினர் 1816இல் கொழும்பு வந்து சேர்ந்தனர். இவர்களில் தலைசிறந்தவராய்த் திகழ் பவர் தான் - டாக்டர் டானியல் பூவர் அவர்கள்.

இவரின் வருகையை நன்றியுடன் நினைவுகூரும்முகமாக அன்னாரின் 206 ம் பிறந்த நாளை நினைவுகூர்ந்து கடந்த செவ்வாய்ககிழமை (27.6.95) வட்டுக்கோட்டையில் மிக்க விமரிசையாகக் கொண்டாடப்பட்டது இவ்வாண்டு, இந்நாளை யாழ் கல்லூரி நிறுவகர் நாளாக நிறைவு கூறப் பட்டது.

யாழ்ப்பாணம் வந்து சேர்ந்ததும் டானியல் பூவரும் பாரியாரும் கனம் வாரனும் தெல்லிப்பளையில் பணியாற்ற 1816 ம் ஆண்டு அக்டோபர் 15 ம் திகதி குடியேற்றினார் - இவர்களின் விடா முயற்சியாலும், செபத்தாலும் தெல்லிப் பளையில், அமெரிக்க மிஷன் முதற் பணி மனை தொடங்கப் பட்டது. - டாக்டர் பூவர் ஐயரும் அவருடன் சேர்ந்த திருத் தொண்டரும் யாழ்.குடா நாட்டில் ஆற்றிய அருட்பணியை நாம் என்றும் நினைவுகூர்ந்து இறைவனுக்கு நன்றி செலுத்தவேண்டும்.

நீடித்த காலமதாகப் பரன் எமை நேசித்த பட்சத்தை
வாசித்து, வாசித்துப் - பாடித்
துதிக்க வேண்டியது நமது கடமை.
'' செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும் வானக
மும் ஆற்ற லரிது ''

என்ற வள்ளுவர் வாக்கை நாம் நினைவு கூர்வது நல்லது.

நமக்காக நாம் வாழும் நாட்டிற்காகப் பெருந்தொண் டாற்றி இத்தொண்டின் விளைவால் தோறிய புதுயுகத்தில் நாம் வாழ்ந்தது, அன்னாரின் முன் மாதிரியை பின்பற்றி தொடர்ந்து திருப்பணியாற்ற இறைவன் அழைக்கிறார் என்பதை நாம் மறக்கப்படாது.

அன்று பாரதியார் கூறியது போல - '' மறைவாக நமக் குள்ளே பழங்கதை சொல்வதிலேன் மகிமை இல்லை '' என் பதையுணர்ந்து. தானியேல் பூவர் ஐயரும், அவரின் அணியி னரும் ஆற்றிய திருத்தொண்டை நினைவுகூர்ந்து-அதனால் உந்தப்பட்டு - இன்றைய காலக் கட்டத்தில் அதிலும் பார்க் கச் சிறந்த தொண்டைச்செய்வதையே இறைவன் நம்மிடம் எதிர்பார்க்கிறார் - அன்று தொட்டு, இந்நாட்டினரிற் பலர் கனம் R. E. P. உவெல்ச்,கனம் ஹச்கெயர். கனம் இளைய தம்பி, பேராயர் குலேந்திரன் போன்ற அனேகர் தொடர் ந்து, இத்திருப்பணியை செய்து வந்தனர் -அவர்களையும் நாம் நன்றிடன் இத்தருணத்தில் நினைவுகூற நாம் மறக்கப் படாது

'' எத்தனை தீர்க்கர், அநேக அப்போஸ்தலர்
எத்தனை போதகர்கள், இரத்தச் சாட்சிகள்
எத்தனை வேண்டுமே அத்தனையும் தந்திங்
கித்தனையாய்க் கிருபை வைத்த நம் கர்த்தனைப்

## சிறுவர் பகுதி

### எண்ணச்சிறகுகள்-மூன்று

சங்கீதம் 17;9 – என்னை ஒடுக்குகிற துன்மார்க்கருக்கும், என்னைச் சூழ்ந்து கொள்ளுகிற என் பிராணப் பகைஞருக்கும் மறைவாக உம்முடைய செட்டைகளின் நிழலிலே என்னைக் காப்பாற்றும்.

நாற்புறமும் விரிந்த கிளைகளையும், பசிய இலைகளையும் கொண்டு பரந்து நின்ற வேப்பமரத்தின் கிளை ஒன்றில் கூடு ஒன்று இருந்தது. அக்கூட்டில் சிறிதளவு சிறகுகளே முளைத்திருந்த புறாக் குஞ்சுகள் இரண்டிற்கும் தாயும், தந்தையும் இரை தேடித்தேடி வந்து மாறி, மாறி ஊட்டிக்கொண டிருந்தன, தாயும், தந்தையும், அருகில் வரும்போது குஞ்சுகள் இரண்டும் 'ஆ ஆ' வென வாய்களைத்திறப்பதும், வாயில் வைத்த இரையை 'லபக்' 'லபக் கென விழுங்குவதும் தமது மணிக்கண்களைச் சுழற்றி ''வீ வீ'' எனக் கத்துவது காண்பவர் கண்களையும் கருத்தையும் கவரக்கூடியதாய் இருந்தது.

அன்று காலையில் பெரிய பறவைகள் இரண்டும் இரைதேடச் சென்றன. வயலில் இரை கண்டு இறங்கிய போது அவையிரண்டின் கால்களும் கண்ணியில் சிக்கிக் கொள்ளவே, நெடுநேரமாகியும் கூடு திருபவில்லை. குஞ்சுகள் பசியால் ''வீவீ'' என்று கத்திக்கொண்டிருந்தன. வானம் கருமேகங்களால் இரண்டிருந்தது. பெருங்காற்று சுழன்றடித்தது. மின்னல் கண்ணைப்பறிக்க, இடிமுழக்கம் காதைப்பிளந்தது.

வீசிய சுழற்காற்று குஞ்சுகளின் கூட்டை பிய்த்து உதவி தரையில் எறிந்தது அந்த நேரத்தில் பெருமழையும் பெய்யத் தொடங்கியது. குஞ்சுகள் இரண்டும் யாருமற்ற அனாதைகளாக மழையில் நனைந்து, குளிரில் நடுங்கி கதகதப்பும் அரவணைப்பும் வேண்டி, ''வீ வீ'' என்று கதறித்துடித்தன. சற்று நேரத்தின் பின் மழை ஒய்ந்தது. குளிரினாலும் பசியினாலும் குஞ்சுகள் இரண்டும் வெடவெடத்தன அவற்றின் மணிக்கண்கள் ஆசையுடன் பெற்றோரைத் தேடி நிராசையினால் வாடின.

கருமுகில்கள் களைய, கதிரவனின் வெம்மை உடலை எரித்தது. உயரே வானத்தில பளபளக்கும் தனது பயங்கர வட்டவிழிகளை உருட்டியபடி, வல்லூறு ஒன்று இரைதேடி வட்டமிட்டுக்கொண்டிருந்தது. நிலத்தில் அனாதைகளாகக் கிடந்து, பசியால் துடிதுடித்த புறாக்குஞ்சுகள் அதன் கண்ணில் பட்டது. இரைகவரும் வெற்றியுடன் சரிவாகப் பறந்து பாய்ந்தது, வல்லூறு.

அப்பொழுது வேப்பமரத்தின் அருகில் இருந்த பாதையில் சிறு பையனுடன் நடந்துவந்த சிறு பெண்ணின் கண்கள் நாலாபுரமும் சுற்றி அலைத்தன திடீரென அக் குட்டிப்பெண். ''அண்ணா! அண்ணா! அங்கே பார், புறாக் குஞ்சுகள்!'' என்று ஆச்சரியத் தோடு கூவினாள் குஞ்சுகளுக்கு அருகே ஓடிச்சென்ற இருவரும் குஞ்சுகளை தூக்கி எடுத்து கைகளினால் அரவணைத்துக் கொண்டனர். 'விர்' என்று சரிவாகத் தாழ்ந்து வந்த வல்லுறு ஏமாற்றத்துடன் மேலேழுந்து பறந்தது வல்லூறைக் கண்ட சிறுவர்கள் இருவரும் குஞ்சுகளை தம் ஆடைகளுக்குள் மூடி மறைத்து இறுக அணைத்துக் கொண்டனர், ''வீட்டுக்குக் கொண்டுபோய், உணவு ஊட்டி வளர்ப்போம்.'' என்ற தமையனின் யோசனைக்கு சிறு பெண்ணும் தலையாட்டினாள். இருவரும் வீடு நோக்கி விரைந்து ஓடினர். அவர்களின் ஆடைகளுக்குள் தமக்கு வேண்டிய தகதப்பையும் அரவணைப்பையும் தேடி உணர்ந்து கொண்ட குஞ்சுகள் இரண்டும் பயத்தை மறந்து ''உக்கும் உக்கும்'' எனத் தமக்குள் சந்தோசமாகக் கதைபேசிக் கொண்டன.

துன்பங்கள் நெருங்குகையில் கலங்காதே அன்போடு அரவணைக்கும் கரங்களை மறவாதே.

ஏ. ஜெ. ஜி.

## திருவும் அருட்திருவும்



அருள்திரு: ஏன் உமது மகன் வேதாகமத்தைப் படிக்க முடியாதென்கிறான்?

திரு: வேதாகமத்தைப் படமாக T.V.யில்போடப் போகிறார்களாம் இப்போ கதையைப்படித்தபின் படம் சுவார்ஸ்யமாக இருக்காது என்கிறான்.

- மணிமாறன்

# The Morning Star

Diocesan Office, Vaddukoddai 30. 06. 1995


## EDITORIAL

## A QUEST FOR A HOMELAND

Much hue and cry is made over the term 'Homeland' in the Colombo based papers in the recent past. The concept of homeland cannot be understood by the people who have been living undisturbed. Such people, naturally will be perturbed when they hear of Tamils, craving for a homeland.

In 1960, President John F. Kennedy admonished the Americans, saying, 'Don't ask what America will do to you: but ask what you will do to America' This statement would not have been a necessity 200 years ago, because at that time, they were fighting a civil war for independence. In the time of Kennedy's Presidency, Americans were well settled and undisturbed. They have lost the meaning of the word 'Homeland'

What is a homeland? Bharathiar says, 'My Homeland is where my father and mother lived; their entire life, happily and undisturbed.' What more proof do you need? More than that, here in this part of the world, which I claim to be my homeland, my ancestors have been living in continuous succession for many centuries. He was also proved beyond doubt that a king by the name Pararajasingham was ruling my homeland just before the Portugese captured Jaffna in early 17th century Is not the four centuries of continuous living sufficient to claim a homeland?

The Israelites came to occupy, their land flowing with milk and honey in the 12th century B. C. Israel became a nation in 1000 B. C. and they were taken in captivity - the northern Israel in 729 B. C. and southern Israel in 585 B. C. The Jews in captivity, craved for their homelaad where their ancestors lived as a nation for four centuries.

The Psalmist sings in anguish, 'By the rivers of Babylon, there we sat down and wept when we remembered Zion... If I forget you O Jerusalem, let my right hand wither!' (Ps 137: 1-5). The Jews in Babylonian captivity always dreamed of their homeland, Zion. The prophets comforted them that one day they would return to their homeland and there they would be able to worship their Lord. Jeremiah, the prophet redeemed a piece of land, as they were being taken captives to show that they will one day return to their homeland. Lawyers like Ezra drafted a constitution (or laws - whatever you may call) for their redeemed homeland, even when they were living in captivity in a foreign land.

The concept of a 'homeland' is formed in one's mind when the peaceful existence of his nation ( or province, homeland or separate state, etc. ) is disturbed by aliens and the meaning of the 'homeland' became well, defined when people are driven away to foreign countries. The Psalmist cries unto the Lord, 'O God, the heathen have come into thy inheritance; they have defiled thy holy temple; they have laid Jerusalem in ruins.. They have shed blood of the innocent like water and there was no one to bury them. We have become a taunt to our neighbours, mocked and derided by those round about us' Ps 79:1-4.

The second Isaiah living in exile prophesied. 'Fear not, you worm Jacob, you men of Israel! I will help 'you' says, the Lord, 'behold I will make of you a threshing sledge, new, sharp and having teeth: You shall thresh them and crush them and you shall winnow them and the wind shall carry them away, and the tempest shall scatter them ( Is 41 : 14 - 16 ). Then I shall bring the children of Israel from afar (Cf Is 43: 1-9.)

The people living in comfort should try to comprehend the concept of the 'Homeland' or else, they may also become a scattered nation. Then they will know what a homeland is.

## The Angels Meant What They Said

We hear a lot about "Peace on earth" this time of year. According to Luke's Gospel, angels in the skies over Bethlehem were the first to sing about "peace on earth" But that was nearly 2,000 years ago, and human beings are still building weapons and fighting wars. Did the angels really mean what they said? If Jesus' coming was supposed to bring peace to the world, why is there still so much violence?

Philosophers and theologians through the ages have struggled with that question. But none of their answers has succeeded in changing the course of world events. Nor have any of them provided much comfort for the families of fallen soldiers.

Here's a radical thought: Let's get our government and military leaders to study seriously how peace on earth could be achieved. If the Pentagon, for instance. devoted half as much time and money to making peace as it does to plottings strategies of war, maybe U. S. leaders would not find themselves so stymied by conflicts in places like Bosnia and Somalia. Maybe we could find a constructive alternative to policies based on public opinion polls or the need to demonstrate power.

Of course we are not living in a perfect world. Wars, like sin, will not go away until every heart is guided by the peace of Jesus Christ. But those of us who already claim to be Christ's followers certainly should be able to make a dent in the world's suffering.

Former president Jimmy Carter had the right idea when he went to meet with the leader of North Korea & of Haiti. Refusing to give up on the possibility of peace, he clung to his belief that even the "enemy" can be redeemed. The agreements he helped negotiate this year were not perfect, but they were a lot less messy than wars.

Evangelist Billy Graham praised Carter's North Korea mission when he was in Louisville, Ky., at the North American Conference for Itinerant Evangelists. "Carter..... can make friends with almost anybody." said Graham, who had also met personally with the late Kim II Sung. "I think in North Korea they are looking for friends."

Politicians and pundits are quick to dismiss such simple ideas. (There they go again, Jimmy and Billy, those pious meddlers in international affairs !) Well, call me naive, but I agree with Jimmy and Billy. Diplomacy based on friendship could go a long way toward healing the world's divisions. If thugs and dictators are among those Jesus died for, then the least we can do is talk to them and give them a chance to change.

While we we're at it, let's talk with Fidel Castro and end the trade embargo against Cuba. Let's encourage the changes already taking place on that poverty-wracked island. Let's admit that Castro, despite his bluster, is no threat to our national security and may even have done a few good things.

Let's allow moral principles, not economic incentives, to determine our stance toward Iraqi dictator Sadam Hussein.

Let's put as much money into programs for training peacemakers as we do into military preparation. Let's create new kinds of armies, equipped with conflict resolution and grass-roots development skills.

Let's take seriously the possibility that the angels meant what they said - that peace on earth is God's will, beginning right now, with us. The biggest risk of peacemaking is the risk of looking foolish if we fail. It's the same risk God took in creating us to care for the earth It's the same risk the Creator took that first Christmas in coming to earth as a tiny baby. It's the same risk Jesus took when he entrusted his mission to a rag-tag band of disciples God calls us to take that risk.

(Courtesy Presbyterian Survey)

Registered as a News Paper at the G P. O. Sri Lanka. News Printed for the Jaffna Diocese of the Church of South India at the American Ceylon Mission Press. 182, 1st Cross Street, Jaffna on Friday the 30th of June 1995 and published by Mr. G. Nadaraja, Diocesan office, Vaddukoddai.